# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க,வையும் – துணை போகும் அ.தி.மு.க,வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம்!



சேலம் கிழக்கு மாவட்டம் பனமரத்துப்பட்டி ஒன்றியம் தி.மு.க, சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததாக ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஆதரவாக செயல்படுவதாக அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட துணை செயலாளர் க. சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் ஒன்றிய செயலாளர் உமா சங்கர் மற்றும் திமுக நிர்வாகிகள் , கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும், துணை போன அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், கரூர் மாவட்டத்தில் 32 இடங்களில் நடைபெற்றது. கரூர் மாநகரம் சார்பாக, கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசையும்,துணை நிற்கும் அடிமை அதிமுகவையும் கண்டித்து இண்டூர் பேருந்து நிலையம் அருகே மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி,திமுக ஒன்றிய செயலாளர்கள் என்.பி.பெரியண்ணன், வைகுந்தம், ஏ.எஸ்.சண்முகம், மல்லமுத்து, மாநில நிர்வாகி ஆர். பி.செந்தில்குமார்,மாவட்ட நிர்வாகி ஆறுமுகம்,பேரூர் கழக செயலாளர் பிரகாஷ்,முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் எச்சனஹள்ளி. சண்முகம்,சேட்டு,இளைஞர் அணி ராஜகோபால்,முரளி,ஐ.டி.விங் ஈஸ்வர்,யாஸ்மின்,மற்றும் கூட்டணி கட்சியினர்,பெண்கள் உட்பட 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி முழக்கங்கள் எழுப்பினர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, பெரம்பலூர் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 4 இடங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் எம்.பிரபாகரன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் பல ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் திருப்பூர் இரயில் நிலையம் முன்பு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டியில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசையும்,அதற்கு துணை நிற்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் சி.முத்துக்குமார்,மற்றும் ஜெயச்சந்திரன்,மாரி,கூட்டணி கட்சியினர் சென்னகிருஷ்ணன்,தமிழ் அன்வர்,பழனி,மாயக்கண்ணன், பிரகாசம்,வேலன்,வஞ்சி, அஸ்லாம்,மற்றும் மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள்,மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி நகரம், பர்கூர், காவேரிபட்டிணம், மத்தூர், ஊத்தங்கரை ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், பொதுக்குழு உறுப்பினர் சித்ரா சந்திரசேகர், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



திருவாரூர் முகுந்தனூரில் நடைபெற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழ்நாடு விரோதப்போக்குக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று கண்டன உரையாற்றினார். ஒன்றிய செயலாளர் சேகர்.கலியபெருமாள் ,கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில், கோவை டாடாபாத்தில், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பா.ஜ.க. – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட கூட்டணி கட்சி தலைவர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.